முருகப்பெருமான் துணை

**மகான் காகபுஜண்டர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.01.2024,** திங்கட்கிழமை

1. ஞானத் தலைவன் அவதாரமான
ஞானியே ஆறுமுக அரங்கனே
தானத்தில் சிறந்த அன்னதானத்தை
தரணியில் அளவிலா விதைத்த

2. விதைத்தநல் ஞான தேசிகனே
வேலவனாக உன்னை கண்டு
பூதலத்தில் சோபகிருது கலை திங்கள்
பொங்கல் திருநாள் முதல் திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் முதல் நாள், 15.01.2024, திங்கட்கிழமை)

3. வாரமதில் காகபுஜண்டர் யானும்
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
சோரமிலா தருமவான்களையும்
சுத்தநெறிபட ஞானவான்களையும் படைக்க

4. படைக்க அவதாரம் எடுத்து
பண்போடு வழிநடத்தும் அரங்கா
தடையற உன் சேவைக்குள்
தவசிகளும் சித்த பெருமான்களும்

5. பெருமான்களும் கலந்துள்ளனர்
புண்ணிய பலம் பெருகபெருக
வருங்காலம் ஞானிகள் படை
வல்லமைபட அளவிலா கூடி

6. கூடியே உந்தன் அவதார நோக்கம்
குவலயம் கண்டடைந்து வளமுற
தேடியே புஜண்டனும் உம்மோடு
துணை கொண்டு அருளுகிறேன்

7. அருளவே அரங்கன் நீ ஆற்றல்பட
அடியவன் எனை போல் உலகில்
பெருமைபட சிரஞ்சீவித் தன்மை
பிசகில்லா கண்டு வரமாக

8. வரமாக உன்னை நாடிவரும்
வல்லமை தரும சிந்தை கொண்ட
அறம் காக்கும் அனைத்து சீடர்கட்கும்
அற்புதமான சிரஞ்சீவித் தன்மை

9. தன்மைதனை தீட்சையாக வழங்க
தந்தேன் புஜண்டனும் வரமதை
நன்மைதரும் அன்னதான சேவையை
நம்பகமுற கடைபிடித்து வரும்

10. வரும் மக்கள் அனைத்து பேரும்
வள்ளலாக வருங்காலம் தன்னில்
தருமபலமிக்க ஞானிகளாகவே
தரணிமாற்றும் மகா சக்திகளாக

11. ஆகவே தேற்றம் கண்டு
அனைவரும் அரங்கன் விருப்பமாக
யுகமாற்றமுடன் நல்லாட்சி ஞான ஆட்சி
உலகினில் அற்புதமுடன் படைப்பர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–